[1972 ஏப்ரல் 1

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, ஒன்றியத் தலைவராலும், மாவட்ட ஆட்சித் தலைவராலும் சிபார்சு செய்யப்பட்டு வந்திருக்கிறது. அந்த இடத்தில் பாலம் அமைப்பதாலே பத்து கிராமங்களுக்குத் தொடர்பு ஏற்படும் சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அதை அரசு பரிவுடன் ஆலோசித்து, அந்த ஒன்றியத்திற்கு மானியம் வழங்கி அந்தப் பாலத்தை கட்டிக் கொடுக்க முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : குறிப்பிட்ட அந்த இடத்தில் பாலம் கட்ட ரூ. 50,000 செலவாகும் என்று கூறப்படுகிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டப் பட்டியலில் அந்தப் பாலம் கட்டுவது இடம் பெறவில்லை என்று சொல்கிறார்கள். இதர சாலைகள் என்ற வேலையின் கீழ் எடுத்துக் கொள்ளலாம் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். இதர சாலைகளின் கீழ் ரூ. 190 லட்சம் ஒதுக்கப்பட்டிருந்தாலும், ரூ. 220 லட்சத்திற்கு மேல் செலவழிக்கப்பட்டு விட்டது. ஆகவே, இப்போது இருக்கிற ஒதுக்கீட்டில் அதற்கு நிதி ஒதுக்குவதற்கு இல்லை. நிதி வசதி ஏற்படுகிறபோது அது சாத்தியமானால் எடுத்துக் கொள்ளலாம் என்று தலைமைப்பொறியாளர் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அரிசனங்களுக்கு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள்

*821 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், வயலூர் கிராம தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலைமையில் உள்ளது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, என்னுடைய தொகுதியில் உள்ள வயலூர் கிராம மக்களுக்குக் குடிதண்ணீர் வழங்க வேண்டுமென்று நான்கு ஆண்டுகளாகக் கோரிக்கை எழுப்பி வருகிறேன். இப்போது இல்லை என்ற பதில் வருகிறது. இதை மறுபரிசிலனை செய்து இனிமேலாகிலும் உண்டு, நிறைவேற்றித் தருகிறோம் என்ற பதிலை எதிர்பார்க்கலாமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அந்த இடத்தில் ஏற்கெனவே ஒரு குடி தண்ணீர்க் கிணறு இருக்கிறது. அதை ரிப்பேர் செய்வதற்கு ரூ. 3,000 வேண்டு மென்று கேட்கப்பட்டது. அது கொடுக்கப்பட்டிருக்கிறது. கிணறு இல்லை யென்றால், கிணறு கட்டுவதற்கும் வேறு பல குடிதண்ணீர் வசதி செய்து

1972 ஏப்ரல் 1]

கொடுப்பதற்கும் அரசு தயாராக இருக்கிறது. அங்கே பொதுமக்களுக்குத் தேவையான தண்ணீர் இருக்கிறது. அந்தக் கிணறை ரிப்பேர் செய்வதற்கும் ரூ. 3,000 கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் அது பற்றிய பரிசீலனை இல்லை.

* 822 வினு.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிரி வட்டம், கவுத்தாசநல்லூர் தாழ்த்தப்பட்ட பொதுமக்களுக்கு மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் குடிநீர் வசதி செய்து தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கப்படும்?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) இவ் வினுவுக்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, என்னுடைய கேள்வி, இருக்கின்ற கிணற்றில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கான திட்டம் உண்டா என்பதுதான், கிணறு இருக்கிறது என்ற பிரச்னையை நானும் நன்ருக அறிவேன். இனிமேலாவது பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்குவதற்காக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் திட்டம் பரிசீலனைக்கு எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அங்கே இருக்கின்ற மக்கள் தொகையை வைத்துத்தான் மேல்நிலைத் தொட்டி கட்டும் திட்டம் மேற் கொள்ளப்படும். குறிப்பிட்ட அந்தக் கிராமத்தில் உள்ள மக்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. அங்கேயிருக்கிற மக்களுக்கு அந்தக் கிணற்றில் உள்ள தண்ணீர் போதுமானதாக இருக்கிறது. அங்கே மேல்நிலைத் தொட்டி தேவையில்லை. மேலே சொன்ன கிராமத்தில் அங்கேயிருக்கிற கிணற்றை ரிப்பேர் செய்வதற்கும் நிதி ஒதுக்கம் செய்திருக்கிருேம். இரண்டாவது இடத்திலும் குடிதண்ணீர்க் கிணறு இருக்கிறது. அது போதுமானதாக இல்லை என்ருல் அதற்காக மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டுவதைப்பற்றி அரசு பரிசிலனை செய்யும்.

திரு. மு. பழனிவேலன் : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களின் சார்பில் கிணறு கட்டுதல், ஆழப்படுத்தல் போன்றவற்றிற்குத் தொகை ஒதுக்கினுல், பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட மக்கள் அல்லாதவர்களுக்குப் பயன்படுகிறது. தாழ்த்தப்பட்ட மக்களின் காலனிகளுக்கு அந்தப் பணத்தைப் பயன்படுத்த அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா?